வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி-4.10.2025 நேரம்- மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி 62 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பல்வேறு இளைஞர் நலத் திட்டங்களை இன்று தொடக்கி வைத்தார்.
- அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ் தோல் மற்றும் காலணி பொருட்கள் மீதான வரி விகிதங்களை மத்திய அரசு 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைத்துள்ளது.
- ஆரோக்கியமான பெண்கள்-வலிமையான குடும்பம் இயக்கம் வரலாற்று சிறப்பு மிக்கது என்றும் திரு நட்டா கூறி உள்ளார்.
- வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ், 140 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

<u>நரேந்திர மோடி</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி 62 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பல்வேறு இளைஞர் நலத் திட்டங்களை இன்று தொடக்கி வைத்தார். இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு வசதிகளை மேம்படுத்தும் வகையில், நாடெங்கிலும், ஆயிரம் அரசு ஐடிஐ தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துவதற்கான பிஎம்-சேது திட்டமும் இதில் அடங்கும்.

புதுடெல்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற கவ்ஷல் தீக் ஷாந்த் சமரோஹ் நிகழ்ச்சியில் பேசிய அவர் அறிவுசார் வலிமையே நம் நாட்டின் பலம் என்று கூறினார். சுயசார்பு இந்தியாவிற்கான பணிமனைகளாக தொழிற்பயிற்சி மையங்கள் திகழ்கின்றன என்று பிரதமர் தெரிவித்தார்.

இளையோரின் நலனை கருத்தில் கொண்டு திறன் மேம்பாட்டிற்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக திரு மோடி குறிப்பிட்டார். இந்தியா அறிவு மற்றும் திறன் கொண்ட நாடு என்றும் அறிவுசார் வலிமை நாட்டின் மிகப் பெரிய சக்தி என்றும் அவர் கூறினார். பாரத ரத்னா கற்பூரி தாக்கூர் பெயரில் திறன் பல்கலைக் கழகம் தொடங்கப்பட உள்ளதாக தெரிவித்த பிரதமர் இந்நிகழ்ச்சியின் போது 34 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 400 நவோதயா பள்ளிகள் மற்றும் 200 ஏக்லவ்விய மாதிரி குடியிருப்பு பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ள ஆயிரத்து 200 தொழிற்கல்வி திறன் ஆய்வகங்களையும் திறந்து வைத்தார்.

ஆரோக்கியமான பெண்கள்-வலிமையான குடும்பம் இயக்கம் வெற்றி பெறவும் பயன் உள்ளதாக மாற்றவும் அயராது உழைத்த அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். மத்திய அமைச்சர் திரு ஜேபி நட்டாவின் சமூக ஊடக பதிவிற்கு பதிலளித்த திரு மோடி, வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், ஆரோக்கியமான, அதிகாரம் பெற்ற சமூகத்தை உருவாக்குவதற்கும் இதுபோன்ற கூட்டு நடவடிக்கை முக்கியத் துவம் வாய்ந்தது என்றும் கூறி உள்ளார்.

*<u>நட்டா</u>*

ஆரோக்கியமான பெண்கள்-வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ் கடந்த மாதம் 17-ஆம் தேதி தொடங்கி இம்மாதம் 2-ஆம் தேதி வரை நாடு முழுவதும் நடைபெற்ற சுமார் 18 லட்சம் முகாம்களின் மூலம் 6 கோடியே 50 லட்சம் மகளிருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு

ஜேபி நட்டா கூறி உள்ளார். ஒவ்வொரு பெண்ணும் தனது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வழக்கமான சுகாதார பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மகளிர் உடல் நலனைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த இயக்கம் வரலாற்று சிறப்பு மிக்கது என்றும் திரு ஜேபி நட்டா தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

***ஜிஎஸ்டி- தோல் மற்றும் பாதணிகள்***

சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களும் பயன் பெறும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழா, கடந்த மாதம் 22 ஆம் தேதி முதல், நாடெங்கிலும் அமலாகி வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிமைப்படுத்துவதில் முக்கிய நடவடிக்கையாக திகழ்கின்றன. இந்த சீர்திருத்தங்களின் கீழ், பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் மீது அறிவிக்கப்பட்டுள்ள வரிக் குறைப்பினால் மக்களுக்கு கணிசமான ஆறுதல் கிடைத்துள்ளது.

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ் தோல் மற்றும் காலணி பொருட்கள் மீதான வரி விகிதங்களை மத்திய அரசு 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைத்துள்ளது. ஜிஎஸ்டி 2.0 -வின் படி ஒரு ஜோடிக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலை கொண்ட காலணிகளுக்கு தற்போது 5 சதவிகித ஜிஎஸ்டி மட்டுமே விதிக்கப்படுகிறது. இது இளம் நுகர்வோருக்கு நேரடி பலன் அளிக்கிறது. மேலும் சமாய்ஸ் லெதர், கலவை தோல், தோலிழை மற்றும் பதனிடுதல், பல்வேறு தோல் பொருட்களுக்கான ஜிஎஸ்டியும் 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நுகர்வோர் பயன்பெறுவதோடு இளம் தொழில் முனைவோருக்கும் சாதகமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் இந்திய பொருட்களுக்கு

நல்ல வரவேற்பும் போட்டியும் அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்த வரி குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் ட்டுள்ளது.

<u>*நிதின் கட்கரி*</u>

புதுச்சேரி இந்திராகாந்தி சதுக்கம் முதல் ராஜீவ்காந்தி சதுக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா வரும் 13-ஆம் தேதி நடைபெற உள்ளது. விழாவில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி பங்கேற்க உள்ளார். சுமார் 450 கோடி ரூபாய் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட உள்ள மேம்பால பணிகள் இரண்டரை ஆண்டுகளுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மாநில பாஜக தலைவர் திரு ராமலிங்கம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<u>*சுகாதார அமைச்சகம்*</u>

2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சளி, இருமல் மருந்துகளை பரிந்துரைக்க கூடாது என்று மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. இதுதொடர்பாக அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் குழந்தைகளுக்கு ஏற்படும் இத்தகைய தொந்தரவுகளை உரிய மருத்துவ ஆலோசனையின் கீழ் கண்காணிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் மத்திய பிரதேச மாநிலத்தில் இருமல் மருந்து உட்கொண்ட 10-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ள நிலையில் இதுதொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வேண்டுகோளின் படி, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம் இருமல் மருந்தின் மாதிரிகளை சோதித்ததில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான டை எதிலின் கிளைக்கால் இருப்பது உறுதியாகி உள்ளது.

## <u>கப்பல் அக் ஷர்</u>

இந்திய கடலோரக் காவல் படை கப்பல் அக் ஷர் காரைக்கால் துறைமுகத்தில் பணி அமர்த்தப்பட்டது.

விரைவு ரோந்து கப்பல்களில் அக் ஷர் 2-ஆவது கப்பலாகும். காரைக்காலில் உள்ள தனியார் துறைமுகத்தில் இந்திய கடலோர காவல் பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்புத் துறையின் கூடுதல் செயலாளர் திருமதி தீப்தி மோகில் சாவ்லா, கூடுதல் இயக்குநர் ஜென்ரல் டோனி மைக்கேல், கடலோர காவல் படை கிழக்கு கடல் சார் தளபதி மற்றும் மத்திய-மாநில அரசின் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் இக்கப்பல் பணியமர்த்தப்பட்டது. .இந்நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு ரவி பிரகாஷ், மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் செல்வி லட்சுமி சவ்தன்யா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அழியாதது என்ற பொருள் படும் அக் ஷர் நாட்டின் கடல் சார் நலனுக்காக மேக் இன் இண்டியா முயற்சியின் கீழ் கோவா ஷிப்யார்டு லிமிடெட் நிறுவனத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்கப்பல் ஆத்மநிர்பார் பாரத்-தின் பொருத்தமான எடுத்துக் காட்டாகும். தோராயமாக 320 டன் எடை கொண்ட இந்தக் கப்பல் அதிகபட்சமாக 27 நாட்ஸ் வேகத்தை அடைய இரண்டு 3 ஆயிரம் கிலோ வாட்ஸ் டீசல் எஞ்சின் மூலம் இயக்கப்படுகிறது.

## <u>குமரன்-சுப்பிரமணிய சிவா</u>

கொடி காத்த குமரன் என்று போற்றப்படும் திருப்பூர் குமரன் மற்றும் நாட்டின் விடுதலைக்காக அயராது பாடுபட்ட சுப்பிரமணிய சிவா ஆகியோரின் பிறந்த நாளான இன்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், மற்றும் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளனர்.

நாட்டின் விடுதலைக்காக போராடிய குமரனின் வீர நினைவுகள் மக்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் நெசவுத் தொழில் நகரமான திருப்பூரில் பிறந்த அவரது நாட்டுப் பற்று போற்றுதலுக்கு உரியது என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட சுப்பிரமணிய சிவா மற்றும் திருப்பூர் குமரனின் பிறந்த தினமான இன்று அவர்களின் தியாகங்களை நினைவு கூருவோம் என்று டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்ற திருப்பூர் குமரன் காவலர்களால் தாக்கப்பட்ட போதும் தேசியக் கொடியை கையில் ஏந்தியவாறே உயிர் நீத்ததைத் தொடர்ந்து அவர் கொடி காத்த குமரன் என அழைக்கப்படுகிறார்.

***ஓவியக் கண்காட்சி***

மதுரை சித்திரக்காரர்கள் குழு சார்பில் 5 ஓவியர்களின் சமகாலத்திய தனித்துவமான ஓவியக் கண்காட்சி புதுச்சேரியில் நேற்று மாலை துவங்கியது. அருங்காட்சியகம் அருகே உள்ள அரசு கலை பண்பாட்டுத் துறை புதுச்சேரி வளர் கலைக் கூடத்தில் வரும் 9-ஆம் தேதி வரை இக்கண்காட்சி நடைபெற உள்ளது. கண்காட்சியின் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக இந்திய அரசின் முன்னாள் பிராந்திய இயக்குநர் திரு கோபால், அகில இந்திய வானொலியின் ஓய்வு பெற்ற உதவி இயக்குநர் திரு சிவக்குமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த ஓவியக் கண்காட்சியை சுற்றுலா பயணிகள், ஓவியர்கள், ஓவிய மாணவர்கள் உள்ளிட்ட பலர் பார்வையிட்டு வருகின்றனர்.

***கிரிக்கெட்***

அகமதாபாத்தில் வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ், 140 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. 3-ஆம் நாளான இன்று

இந்தியா தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 448 ரன் எடுத்திருந்த போது ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து 2-ஆவது இன்னிங்சை ஆடிய வெஸ்ட் இண்டிஸ் 146 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1-க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***<u>வானிலை</u>***

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***<u>தேர்தல் ஆணையம்</u>***

பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பான தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் தலைமையிலான குழு 12 கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தியது. நாளை மாநில தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுடன் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.